# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 23/2022

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, பெஞ்ச் கிளரர்க் கிரேடு –III என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயசீலி வா.சா.–2 | | சாதி |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | |

---

முதல் விசாரணை 22–04–2025.

நான் அருப்புக்கோட்டை தாலுகா கட்டக்குடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன்.

கட்டங்குடி கிராமம் பட்டாஎண். 816, நத்தம் சர்வே எண். 385/31 நத்தம் தூய அடங்கல் பதிவேடு அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **சா.சா.ஆ.–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பட்டா எண், சர்வே எண்ணிற்கு புல வரைபடத்தின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **சா.சா.ஆ.–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சர்வே எண். நத்தம் தூய அடங்கல் பதிவேட்டில் ராமசாமி ரெட்டியார் மகன் வாதி செல்வராஜ் பெயரில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 19–02– 1996 ம் தேதியில் இலவச வீட்டுமனைப்பட்டாவின் HST 255/1405 –ன் அடிப்படையில் வாதி செல்வராஜ் பெயரில் வகைப்பாடு செய்யப்பட்டது. மேற்படி சர்வே எண். நத்தம் தூய அடங்கல் பதிவேட்டின் படி காலியிடம் என

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல், தற்போது குப்பை குழி, வைக்கோல் படப்புக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. குப்பைக்குழி மற்றும் வைக்கோல் படப்பு எப்போது வைக்கப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது.

பிரதிவாதி தரப்பில் கு.வி. :–

சர்வே எண். 385/31 மொத்தம் எத்தனை விஸ்தீரணம் என்றால் 111 சதுர மீட்டர். சர்வே எண். 385/31 ல் கடந்த 08–08–1994 ல் பிரதிவாதி வேலுச்சாமி பெயருக்கு 55 சதுரமீட்டர் ஒப்படைப்பு பட்டா அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண். 385/31–ல் குப்பை குழி மற்றும் வைக்கோல் படப்பினை பிரதிவாதி வேலுச்சாமி வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் ஆமாம். பிரதிவாதிக்கு சர்வே எண் 385/31 ஐ பொறுத்து 08–08–1994 ல் ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்ட விவரத்தை வருவாய் வட்டாட்சியரை அழைத்து விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.